மரம் வளர்ப்போம் !! மழை பெறுவோம் !!

**வாலாஜாபேட்டை நகராட்சி**

**நகரமன்ற சாதாரணக்கூட்டம்**

| | |
|---|---|
| குறள் : | எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்<br>மெய்ப்பொருள் காண்ப தறிவு |
| பொருள் : | எந்தவொரு பொருள் குறித்து எவர் எதைச் சொன்னாலும், அதை அப்படியே நம்பி ஏற்றுக் கொள்ளாமல் உண்மை எது என்பதை ஆராய்ந்து தெளிவதுதான் அறிவுடைமையாகும். |

2022-ம் வருடம் ஜீலை மாதம் 29-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர மன்றக்கூடத்தில் நடைபெற இருக்கும் சாதாரணக்கூட்டத்திற்கு துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகரமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**முன்னிலை : திருமதி.T.ஹரிணி தில்லை, நகரமன்ற தலைவர் அவர்கள்,**

| வ. எண் | மன்றப்பொருள்கள் |
|---|---|
| 1 | நகராட்சி ஆணையர் அவர்களின் ஜீலை மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| 2 | நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீலை மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| 3 | வாலாஜபேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பேருந்து நிலையத்தினை 3 ஆண்டுகளுக்கு புதுப்பித்து சான்றிதழ் வழங்கிட கோரி இராணிப்பேட்டை ஆட்சியர் மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் அவர்களுக்கு கடிதம் அளிக்கப்பட்டது. இக்கடிதம் தொடர்பாக இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் வாலாஜாபேட்டை நகராட்சி பேருந்து நிலையத்தினை ஆய்வுசெய்து பொது மக்களுக்கு பயன்படும் வகையில் புதியதாக குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் (Reverse Osmosis Plant) அமைத்திட அறிவுறுத்தியதின் பேரில் வாலாஜபேட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் புதியதாக குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் (Reverse Osmosis Plant) அமைத்து கொள்ளவும் அதற்கான தோராய செலவீனம் ரூ.1.75 இலட்சத்தினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.2022-23ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந,க,எண்.0935/2022/இ1) |
| 4 | வாலாஜாபேட்டை நகராட்சி அலுவலகம் பேருந்து நிலையத்திற்கு அருகே மக்கள் அதிகமாக புழங்ககூடிய பகுதியில் அமைந்துள்ளதால் பாதுகாப்பினை கருதி அலுவலக வளாகம் மற்றும் கட்டிடங்களில் கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்தி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ.50,000/-ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:-**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.2022-23ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந,க,எண்.0934/2022/இ1) |

5 அரசாணை நிலை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.10.2021, மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20543/2021/பி1, நாள்.16.11.2021–ன்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24, சோளிங்கர் ரோட்டில் உள்ள சுடுகாடு பகுதியில் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை (LPG) அமைக்கும் பணிக்கு ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று 20.12.2021ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது. இவ்வலுவலக கடிதங்களின் வாயிலாக பலமுறை அறிவிப்புகள், நினைவூட்டு அறிவிப்புகள் மற்றும் இறுதி அறிவிப்புகள் அனுப்பியும் மேற்படி பணியினை தொடங்கவில்லை. மேற்படி பணியின் முக்கியதுவம் கருதியும், ஒப்பந்தவிதிகளின் படி குறித்த காலத்திற்குள் பணியினை தொடங்க தவறியதாலும் ஒப்பந்ததாரருக்கு வழங்கிய ஒப்பந்தப்பணி விதினளின்படி இரத்து செய்து உத்திரவிடப்பட்டது. மேலும் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு 24.06.2022–ம் தேதி குறுகியகால மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை.

மேற்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் Offline-ல் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளையும் தொழில்நுட்ப தகுதி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது என நகராட்சி பொறியாளரால் சான்றளிக்கப்பட்டுளளது. அதனை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளிகளின் விலைப்புள்ளிகள் 24.06.2022 அன்று திறக்கப்பட்டது. வரப்பெற்ற கீழ்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் விவரம் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24, சோளிங்கர் ரோட்டில் உள்ள இடுகாடு பகுதியில் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை (LPG) அமைக்கும் பணி | 150 இலட்சம் | Mr.M.Purushothaman, No.5/65, Chinna Street, Kamma Palayam Villege, Jambukulam- Post, Walaja Tk, Ranipet Dist | மதிப்பீட்டை விட (ரூ.993/-) 0.01% குறைவு |
| 2 | | | A.M.Hari, No.32/A, Chinna Street, Ammoor Villege, Walaja Tk, Ranipet Dist | மதிப்பீட்டை விட (ரூ.22462/-) 0.18% கூடுதல் |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் Mr.M.Purushothaman, No.5/65, Chinna Street, Kamma Palayam Villege, Jambukulam Post, Walaja Tk, Ranipet Dist, என்பவர் கொடுத்துள்ள மதிப்பீட்டை விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை பணியின் அவசியம் கருதி மன்றம் ஏற்கலாம்.

3.பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிவுத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்:0811/2021/இ1).**

நகரமன்ற தலைவர்
வாலாஜாபேட்டை நகராட்சி